

தலைமைச் செயலகத்தில், நேற்று முன்தினம் (03.12.2025) வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் தலைமையில் தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை–2025 முன்னேற்பாடு நடவடிக்கைகள், வெள்ளப் பாதிப்பு கணக்கெடுப்பு மற்றும் பயிர்க் காப்பீடு குறித்து அனைத்து மாவட்ட வேளாண்மைத் துறை இணை இயக்குநர்களுடன் காணொலிக் காட்சி வாயிலாக ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் வேளாண் உற்பத்தி ஆணையர் மற்றும் அரசுச் செயலாளர் வ.தட்சிணாமூர்த்தி, வேளாண்மை இயக்குநர் பி.முருகேஷ், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் பி.குமரவேல்பாண்டியன், தலைமைப் பொறியாளர் (வே.பொ) ஆர். முருகேசன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### மழை நீரில் மூழ்கியுள்ள பயிர்களைப் பாதுகாத்திட –

# பயிர் மேலாண்மை - பயிர் பாதுகாப்பு நடவடிக்கைகள்!

## அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தலைமையில் ஆய்வுக் கூட்டம்!

சென்னை, டிச. 5 -

வடகிழக்குப் பருவமழை-டித்வா புயல் காரணமாக நீரில் மூழ்கியுள்ள பயிர்களைப் பாதுகாத்திட எடுக்கப்படவேண்டிய பயிர் மேலாண்மை மற்றும் பயிர்பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து வேளாண்மை-உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (03.12.2025) தலைமைச் செயலகத்தில் ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.

தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையில் டித்வா புயல் காரணமாக ஏற்பட்ட பாதிப்புகள் மற்றும் மேற்கொள்ளப்பட வேண்டிய நிவாரண நடவடிக்கைகள் குறித்து 01.12.2025 அன்று நடைபெற்ற ஆய்வுக்கூட்டத்தில் முதலமைச்சர் அவர்கள் வழங்கிய உத்தரவின் படி, வடகிழக்குப் பருவமழை-டித்வா புயல் காரணமாக நீரில் மூழ்கியுள்ள பயிர்களைப் பாதுகாத்திட எடுக்கப்படவேண்டிய பயிர் மேலாண்மை மற்றும் பயிர் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து வேளாண்மை-உழவர் நலத்துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (03.12.2025) தலைமைச் செயலகத்தில் ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.

தமிழ்நாட்டில் வடகிழக்குப் பருவமழை இவ்வாண்டு 16.10.2025 அன்று துவங்கி அனைத்து மாவட்டங்களிலும் பெய்து வருவதுடன், அக்டோபர் மாதம் நிலவிய மோந்தா புயல் மற்றும் தற்போதைய டித்வா புயல் காரணமாக கனமழை மற்றும் அதி கன மழையாக இதுவரை 10 சதவீதம் கூடுதலாக மொத்தம் 401.8 மி.மீ மழை பதிவாகியுள்ளது. தற்போதைய நிலவரப்படி 68,226 எக்டர் பரப்பில் வேளாண் மற்றும் தோட்டக்கலைப் பயிர்கள் நீரில் மூழ்கியுள்ளன.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் படி, பாதிக்கப்பட்டுள்ள நெல்வயல்களில் தேங்கியுள்ள வெள்ள நீரை உடனடியாக வடிக்க அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும் என்று வேளாண்மை-உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிவுறுத்தினார்.

அதிக அளவில் அடைப்பு ஏற்பட்டு, வெள்ள நீர் தேங்குவதற்குக் காரணமாக உள்ள வாய்க்கால்களைக் கண்டறிந்து மாவட்ட ஆட்சியர் மற்றும் தொடர்புடைய நீர்வள ஆதாரத்துறை அலுவலர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று அடைப்பினை நீக்க உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று வேளாண்மைப் பொறியியல் துறையின் செயற்பொறியாளர்களுக்கு அவர் அறிவுறுத்தினார்.

**பயிர் பாதிப்புக்கு நிவாரணம்!**

மேலும், வேளாண்மை மற்றும் சகோதரத்துறைகளின் மாவட்ட அலுவலர் முதல் கள அலுவலர்கள் வரை அனைவரும் பாதிக்கப்பட்ட பகுதிகளை நேரில் ஆய்வு செய்து பயிர் சேத நிலைகளுக்கு ஏற்ப விவசாயிகளுக்கு உரிய பயிர் மேலாண்மை ஆலோசனைகள் வழங்க வேண்டும் என்றும் உடனடியாக, வருவாய்த் துறையுடன் இணைந்து வயல் ஆய்வு மூலம் 33 சதவீதத்திற்கு மேல் ஏற்பட்டுள்ள பயிர் பாதிப்பைக் கணக்கீடு செய்து டிசம்பர் மாத இறுதிக்குள் விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கிட உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளவேண்டும் என்றும் மாவட்ட அலுவலர்களுக்கு வேளாண்மை-உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் உத்தரவிட்டார்.

மேலும், நீரில் மூழ்கியுள்ள பயிர்களைப் பாதுகாத்திட எடுக்கப்பட வேண்டிய பயிர் மேலாண்மை மற்றும் ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்த பயிர் வாரியான தெளிவான அறிவுரைகளை நேரடியாக விவசாயிகளுக்கு வழங்குவதுடன் பல்வேறு சமூக ஊடகங்கள் வாயிலாகவும் விவசாயிகளுக்கு தெரிவித்திட வேண்டும் என்றும், பூச்சி, நோய் தாக்குதலைத் தொடர்ந்து கண்காணித்து, பொருளாதார சேத நிலைக்கு மேல் இருந்தால் பயிர்பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள ஆலோசனைகள் வழங்க வேண்டும் என்றும் அறிவுறுத்தினார். மேலும், இது போன்ற இயற்கை இடற்பாடுகள் நிகழும் நேரங்களில் விவசாயிகளுக்கு துறை அலுவலர்கள் உறுதுணையாக இருந்து அவர்களுக்கு உதவிடவும் கேட்டுக்கொண்டார்.

விதைகள், உரங்கள், பயிர்ப்பாதுகாப்பு மருந்துகள் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மற்றும் தனியார் சில்லரை விற்பனை நிலையங்களில் போதுமான அளவு இருப்பு வைக்கப்பட்டு விற்பனை செய்யப்படுவதை உறுதி செய்யவேண்டும் என்றும், குறிப்பாக, அனைத்து தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களிலும் போதுமான அளவு யூரியா இருப்பு வைக்கப்பட வேண்டும் என்றும், மறு பயிர் செய்வதற்குத் தேவையான விதைகள், பூச்சி, நோய் தாக்குதலால் பாதிக்கப்பட்ட பயிர்களைக் காப்பாற்றிட பயிர் பாதுகாப்பு மருந்துகளை இருப்பு வைத்திட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் வேளாண்மை-உழவர் நலத்துறை அமைச்சர் அவர்கள் மாவட்ட அலுலவர்களுக்கு அறிவுறுத்தினார்.

**பயிர் சேதம் குறித்து ஆய்வு!**

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், ட்ரோன் மற்றும் செயற்கைக்கோள் புகைப்படங்கள் வாயிலாக பாதிக்கப்பட்ட பகுதிகளில் பயிர் சேதம் குறித்த ஆய்வு மேற்கொண்டு தொடர்ந்து அரசுக்கு அறிக்கை அனுப்ப வேண்டும் என்றும் வட்டாரத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள வேளாண் விஞ்ஞானிகள் துறை அலுவலர்களுடன் இணைந்து பயிர் வாரியான பொதுவான பயிர் மேலாண்மைக்கான தொழில்நுட்ப அறிவுரைகளை தத்தம் பகுதியிலுள்ள விவசாயிகளுக்கு வழங்கவேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.

மேலும், சமுதாய வானொலி (FM - ரெயின்போ வானொலி பண்பலை) மூலம் தொடர்ந்து விவசாயிகளுக்கு தொழில்நுட்ப அறிவுரைகளையும் ஆலோசனைகளையும் அன்றாடம் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் வழங்கிடவேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.

**பயிர் பாதுகாப்பு நடவடிக்கை!**

வடகிழக்குப் பருவமழை தொடர்ந்து டிசம்பர் மாத இறுதி வரை நீடிக்கும் என்று எதிர்பார்க்கப்படுவதால், அவ்வப்போது ஏற்படும் பயிர் பாதிப்பு நிலவரங்களை வட்டார வேளாண் அலுவர்களுக்குத் தெரிவித்து உரிய ஆலோசனைகளைப் பெற்று பயிர்பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்று விவசாயிகளை வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் அவர்கள் கேட்டுக்கொண்டார்.

மேலும், ஏற்கனவே முதமைச்சர் அவர்கள் 01.12.2025 ஆய்வுக்கூட்டத்தில் அறிவுறுத்தியவாறு, அக்டோபர், 2025 மாதத்தில் பெய்த கனமழையால் 33 சதவீதம் மற்றும் அதற்கு மேல் பாதிக்கப்பட்ட வேளாண் மற்றும் தோட்டக்கலைப் பயிர்களுக்கு நிவாரணம் பெறுவதற்கான கருத்துருவை மாவட்ட ஆட்சியரின் ஒப்புதலோடு உரிய படிவத்தில் உடன் அரசுக்கு அனுப்பிட வேண்டும் என்று கள அலுவலர்களுக்கு அவர் அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு செயலாளர், வ. தட்சிணாமூர்த்தி வேளாண்மைத்துறை இயக்குநர் .பா.முருகேஷ், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர்பெ.குமாரவேல் பாண்டியன், வேளாண்மைப் பொறியியல்துறையின் தலைமைப் பொறியாளர் ஆர்.முருகேசன் மற்றும் தொடர்புடைய துறைகளின் உயர் அலுவலர்கள் மற்றும் மாவட்ட அலுவலர்கள் (காணொலியில்) கலந்து கொண்டனர்.



இராணிப்பேட்டை சட்டமன்றத் தொகுதி இராணிப்பேட்டை நகரம் வாலாஜா நகரம் பகுதிகளில் கைத்தறி மற்றும் துணிநூல்துறை அமைச்சர் மாவட்ட செயலாளர் ஆர்.காந்தி தலைமையில் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பிறந்தநாளை முன்னிட்டு வி.ஆர்.வி. மழலையர் பள்ளியில் சீருடை மற்றும் அசைவ உணவு வழங்குதல்மற்றும் முத்துக்கடை பேருந்து நிலையத்தில் பொது மக்களுக்கு அசைவ உணவு மற்றும் மருத்துவமனையில் பிறந்த குழந்தைக்கு தங்க மோதிரம் வழங்கினார். உடன் கழக சுற்றுச்சூழல் அணி மாநில துணை செயலாளர் ஆர்.வினோத் காந்தி,மாவட்ட அவைத்தலைவர் ஏ.கே.சுந்தரமூர்த்தி நகர செயலாளர்கள்பி.பூங்காவனம் து. தில்லை நகர மன்ற தலைவர்கள் சுஜாதா வினோத் ஹரிணி தில்லை மற்றும் மாவட்ட சிறுபான்மை பிரிவு அமைப்பாளர் இசட்.அப்துல்லா. நகர மன்ற உறுப்பினர்கள் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### நாடு முழுவதும் 99.2 சதவிகிதம்

# தனிப்பட்ட பயனாளிகளுக்கு ஆதார் இணைப்பு உள்ளது!

## மக்களவையில் டி.எம்.கதிர்ஆனந்த் கேள்விக்கு – அமைச்சர் பதில்!

புதுடெல்லி, டிச.5–

வேலூர் மக்களவைத் தொகுதிக் குட்பட்ட அணைக்கட்டு, கே.வி. குப்பம், குடியாத்தம், வாணியம்பாடி மற்றும் ஆம்பூர் ஆகிய பகுதிகளில் பொதுமக்கள் விநியோக அமைப்பு (PDS) கடைகள் செம்மையாக செயல்படுவதற்கு ஒன்றிய அரசின் செயல்பாடுகள் குறித்து மக்களவையில் வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் D.M.கதிர் ஆனந்த் கேள்வி எழுப்பினார்.



அவரது கேள்விகள் வருமாறு:–

வேலூர் மக்களவைத் தொகுதிக் குட்பட்ட அணைக்கட்டு, கே.வி. குப்பம், குடியாத்தம், வாணியம்பாடி மற்றும் அம்பூர் ஆகிய பகுதிகளில் பொதுமக்கள் விநியோக அமைப்பு (PDS) கடைகள் எவ்வாறு செயல்பட்டு வருகின்றன என விவரங்கள் தருக?

இந்த பகுதிகளில் உள்ள விவசாயிகள் குறைந்தபட்ச ஆதார விலை கொள்முதல் மூலம் நிகர இலாபம் பெறுகிறார்களா? பெறுகின்றனர் எனில் அதன் விவரங்கள் தருக?

ரேஷன் கார்டுகள் தவறாகப் பயன்படுத்தப்படுவதாக உள்ள புகார்களுக்கு ஒன்றிய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவை? அதன் விவரங்கள் யாவை? மேலும் உள்ளூர் PDS பணியினை மேம்படுத்துவதற்கான கால அட்டவணை என்ன?

இவ்வாறு அவர் கேள்விகள் கேட்டிருந்தார்.

அதற்கு ஒன்றிய அரசின் நுகர்வோர் விவகாரங்கள், உணவு மற்றும் பொது விநியோக அமைச்சகத்திற்கான மாநில அமைச்சர் திருமதி நிமுபன் ஜெயந்திபாய் பம்பானியா எழுத்து பூர்வமாக அளித்த பதில் வருமாறு:–

வேலூர், அணைக்கட்டு, கே.வி. குப்பம், குடியாத்தம், வாணியம்பாடி மற்றும் ஆம்பூர் ஆகிய இடங்களில் பொது விநியோக முறை (பி.டி.எஸ்) கடைகள் (நிறுவன வாரியாக) செயல்படும் விவரங்களை 27.11.2025 அன்று இணைப்பின் படி தமிழ்நாடு அரசு தெரிவித்துள்ளது.

2024–2025 காரீஃப் சந்தைப்படுத்தல் பருவத்தில் (கே.எம்.எஸ்) வேலூர் மாவட்டத்தில் மொத்தம் 699 விவசாயிகள் பயனடைந்துள்ளனர். மேலும், ஆம்பூர் மற்றும் வாணியம்பாடி ஆகியவை திருப்பத்தூர் மாவட்டத்தின் நிர்வாக அதிகார வரம்பிற்கு உட்பட்டவை, அங்கு தற்போது நேரடி கொள்முதல் மையங்கள் எதுவும் செயல்படவில்லை.

தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டத்தின் (NFSA) கீழ் ரேஷன் கார்டுகளின் தவறான பயன்பாட்டைத் தடுக்கவும், அவற்றை நிவர்த்தி செய்யவும் இந்திய ஒன்றிய அரசு தொடர்ச்சியான முறையான தொழில்நுட்பம் சார்ந்த சீர்திருத்தங்களை மேற்கொண்டுள்ளது.

முக்கிய செயல்பாடுகளில் பின்வருவன அடங்கும்:

1. நாடெங்கும் 80 கோடி பயனாளிகளின் ரேஷன் கார்டு மற்றும் பயனாளி தரவுத்தளத்தை டிஜிட்டல் மயமாக்குதல், கையேடு பதிவுகளை நீக்குவதற்கும், மேம்பட்ட வெளிப்படைத்தன்மையை உறுதி செய்வதற்கும் வழிவகுக்கிறது. தேசிய அளவில் 99.8% க்கும் மேற்பட்ட ரேஷன் கார்டுகளுக்கும் (குறைந்தது ஒரு உறுப்பினராவது) சுமார் 99.2% தனிப்பட்ட பயனாளிகளுக்கும் ஆதார் இணைப்பு முடிக்கப்பட்டுள்ளது.

2. திசைதிருப்பலைத் தடுக்கவும், துல்லியமான விநியோகத்தை உறுதி செய்யவும், சுமார் 99.6% (5.43 லட்சத்தில் 5.41 லட்சம்) FPSகள் செயல்பாட்டு ePoS சாதனங்களுடன் பொருத்தப்பட்டுள்ளன, இது ஆதார் அடிப்படையிலான அங்கீகாரத்தை அனுமதிக்கிறது. உணவு தானிய விநியோகத்தில் 98.5% (தமிழ்நாட்டில் 100%) இப்போது ஆதார் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

3. வலுப்படுத்தப்பட்ட குறை தீர்க்கும் முறை: அனைத்து மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்களும் செயல்பாட்டு ஆன்லைன் குறை தீர்க்கும் அமைப்புகள், பிரத்யேக 1967/1800–தொடர் கட்டணமில்லா உதவித் தொலைபேசிகள் மற்றும் தவறான பயன்பாடு தொடர்பான புகாரளிப்பதற்கும் கண்காணிப்பதற்கும் வெளிப்படைத் தன்மையுடன் போர்டல்களைக் கொண்டுள்ளன.

4. பயனாளிகளின் e–KYC: ஆதார் தரவை ரேஷன் கார்டு விவரங்களுடன் சரிபார்த்து போலி/நகல் உள்ளீடுகளைத் தடுக்க, மே 2023 இல் e–KYC செயல்முறை தொடங்கப்பட்டது. இதுவரை 85.6% பயனாளிகள் e–KYC–ஐ முடித்துள்ளனர் (தமிழ்நாட்டில் 89.10%). நிறைவை விரைவுபடுத்த, பயனாளிகள் நாடு முழுவதுமுள்ள எந்த FPS–இலிருந்தும் e–KYC–ஐ முடிக்கலாம்.

5. மையப்படுத்தப்பட்ட மேப்பிங் அறிக்கை வழிமுறை:

துல்லியமான மாதாந்திர விநியோகத்தை உறுதி செய்வதற்கும் உரிமைகளை தவறாக பயன்படுத்துவதையோ அல்லது அதிகமாகப் பயன்படுத்துவதையோ தடுக்க, NFSA ரேஷன் கார்டு தரவை அனைத்து மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்களி லிருந்து ePoS பரிவர்த்தனை தரவுகளுடன் ஒருங்கிணைத்து பயனாளி அடையாளம் மற்றும் மாதாந்திர உரிமைகளை சரிபார்க்கும் ஒரு மையப்படுத்தப்பட்ட மேப்பிங் அமைப்பை உருவாக்கியுள்ளது.

வேலூரில் உள்ள நியாய விலைக் கடைகளின் உள் மற்றும் வெளிப்புற சூழலை மேம்படுத்த, மாநிலம் படிப்படியாக நவீனமயமாக்கல் திட்டத்தை மேற்கொண்டுள்ளது. கட்டம்–1ன்கீழ், 3139 நியாய விலைக்கடைகள் நவீனமயமாக்கப்பட்டன. கட்டம்–2க்கு, 5000 கடைகள் இலக்கு நிர்ணயிக்கப்பட்டது, அவற்றில் 4514 நவீனமயமாக்கப் பட்டுள்ளன, மீதமுள்ள 486 கடைகள் கட்டம்–3 இலக்கை நோக்கி கொண்டு செல்லப்பட்டுள்ளன.

உள்கட்டமைப்பு மேம்பாடுகளுக்கு கூடுதலாக, மாநிலம் தரம் மற்றும் சேவை தரங்களிலும் கவனம் செலுத்தியுள்ளது. தர மேலாண்மை மற்றும் பராமரிப்பு நடைமுறைகளுக்காக 11,029 நியாய விலைக் கடைகள் ISO 9001 சான்றிதழைப் பெற்றுள்ளன, மேலும் 2059 நியாய விலைக் கடைகள் பாதுகாப்பான உணவுச் சங்கிலி மற்றும் சேமிப்பு அமைப்புகள் தொடர்பான ISO 28000 சான்றிதழைப் பெற்றுள்ளன.

இவ்வாறு அமைச்சர் தனது பதிலில் கூறியுள்ளார்.

### தி.மு.க. கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை நடத்தும் – துணை முதல்வர்

# உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள் விழா கருத்தரங்கம்!

## தி.மு.க, கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவைத் தலைவர் வாகை சந்திரசேகர் அறிக்கை!

சென்னை, டிச. 5–

தி.மு.க. கலை – இலக்கிய பகுத்தறிவுப் பேரவைத் தலைவர் வாகை சந்திரசேகர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:–

தி.மு.க. கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவையின் சார்பில் திராவிட இளந்தென்றல் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழா கருத்தரங்கம் வருகிற 13.12.2025 (சனிக்கிழமை) காலை 9 மணி அளவில் கோவை, சிங்காநல்லூர் ஸ்ரீ சாய் (விவாகா) திருமண மண்டபத்தில் நடைபெற உள்ளது.

காலை 9 மணிக்கு பறை இசை முழக்கமும், கலைமாமணி இறையன்பன் குத்தூஸ் அவர்களின் இயக்கப் பாடல்களும், புதுகை பூபாலம் குழுவினரின் கலை நிகழ்ச்சியும் நடைபெறும். அதனைத் தொடர்ந்து பேரவை மாநில துணைச் செயலாளர் திருமதி மீனா ஜெயக்குமார் தலைமையில் பேரவை தலைவர் வாகை சந்திரசேகர் தொடக்க உரையாற்றுவார்கள். கழகத் துணைப் பொதுச் செயலாளர் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு. பெ. சாமிநாதன் அவர்கள் வாழ்த்துரை வழங்குவார்கள். கழக மேற்கு மண்டல பொறுப்பாளர் மேனாள் அமைச்சர் வி. செந்தில் பாலாஜி நலத்திட்ட உதவிகள் வழங்கிச் சிறப்புரை ஆற்றுவார்கள்.

தொடர்ந்து மாவட்ட திமுக பொறுப்பாளர்கள் துரை செந்தமிழ்ச் செல்வன், தொண்டாமுத்தூர் ரவி, தளபதி முருகேசன், பாராளுமன்ற உறுப்பினர்கள் கணபதி ப. ராஜ்குமார், கே. ஈஸ்வரசாமி, பேரவை மாநில நிர்வாகிகள் எம்.ஆர்.ஆர். வாசுவிக்ரம் வண்ணை அரங்கநாதன், தில்லைசெல்வம் ஆகியோர் முன்னிலையில் நடைபெறும் கருத்தரங்கில் திரைப்பட இயக்குநர் கரு. பழனியப்பன் அவர்கள் ”யாரால்! யாரால்!! யாரால்!!! என்ற தலைப்பிலும், மூத்த ஊடகவியலாளர் ”தமிழ்க்கேள்வி செந்தில்வேல் திராவிடம் 2.0 ஏன்? எதற்கு? என்ற தலைப்பிலும், பேரவை துணைத் தலைவர் போஸ்வெங்கட் ”ஒரு கல் ஒரு தலைமை என்ற தலைப்பிலும், பேரவைச் செயலாளர் பொள்ளாச்சி மா. உமாபதி ”சனாதனச் சத்ரு என்ற தலைப்பிலும் கருத்துரை நிகழ்த்த உள்ளார்கள்.

பேரவை மாவட்ட அமைப்பாளர் துரை கதிரவன் வரவேற்புரையாற்றுவார், எஸ்.எம்.எஸ். சுதாகரன் நன்றியுரை ஆற்றுவார்.

பிற்பகல் 2 மணி அளவில் கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவையின் மாநில நிர்வாகிகள், மாவட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் (எனது) கூட்டம் பேரவைத் தலைவர் வாகை சந்திரசேகர்) தலைமையில் நடைபெறுகிறது.

பேரவைத் துணைச் செயலாளர்கள் கவிஞர் நன்மாறன், எழில்மாறன், செல்வேந்திரன், கே. வி. குப்பம், சி. கோபி, கலைமாமணி ஜாகிர் உசேன், எம் எஸ். ஹரிபாபு, என். எஸ். மாதேஸ்வரன் ஆகியோர் மாநில நிர்வாகிகளுடன் இணைந்து கருத்தரங்கப் பணிகளைச் செய்து வருகிறார்கள்.

கழக உடன்பிறப்புகள் அனைவரும் கருத்தரங்கில் கலந்துகொண்டு சிறப்பிக்க வேண்டுமென பேரவைத் தலைவர் வாகை சந்திரசேகர் அறிக்கை வாயிலாகத் தெரிவித்துள்ளார்.



விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் உலக மாற்றுத்திறனாளிகள் தினத்தை முன்னிட்டு , மாவட்ட ஆட்சித்தலைவர் மரு. என்.ஓ.சுகபுத்ரா , தலைமையில் , விருதுநகர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஆர்.ஆர்.சீனிவாசன் மற்றும் இராஜபாளையம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.தங்கபாண்டியன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் , மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் , வருவாய் மற்றும் பேரிடர் மற்றும் மேலாண்மைத்துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் 286 பயனாளிகளுக்கு தையல் இயந்திரங்கள் , சக்கர நாற்காலிகள் , காதொலிக்கருவிகள் , ப்ரெய்லி கடிகாரங்கள் , திறன் பேசிகள் உள்ளிட்ட ரூ .25.05 இலட்சம் மதிப்பிலான பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார் .



துணை முதல்வர், கழக இளைஞரணி செயலாளர் உதயநிதிஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு திருப்பத்தூர் மாவட்டம், ஜோலார்பேட்டை கிழக்கு ஒன்றிய இளைஞரணி சார்பில் மண்டலவாடி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் நடைபெற்ற விழாவில் மாவட்டச் செயலாளர், க.தேவராஜி எம்.எல்.ஏ. சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு மாணவ – மாணவிகளுக்கு நோட்டு புத்தகங்கள் மற்றும் இனிப்புகள் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் ஆ.சம்பத்குமார், க.உமாகன்ரங்கம், வீ.வடிவேல், கோபிநாதன், முருகன், செந்தில்குமார், வெங்கடேசன், சர்வீன், நாராயணன், ஜெயக்குமார், அறிவுநிதி மற்றும் கழக முன்னோடிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டார்கள்.